DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.171 /2023**

**(CNR.No: TNTH06-0002187 -2023 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாய்ராம் | Town | சின்னமனூர் |
| Father Name | : வெங்கட்ராமன் | Taluk | : உத்தமபாளையம் |
| Age | : 62 | **வா.சா.1** | |

நாள் : 23.06.2026

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆனது கிருஷ்ணமூர்த்தி என்பவர் ராமசந்திரன் என்பருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரயப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், வெங்கட்ராமன் ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படியாரில் வெங்கட்ராமன் என்பவர் எனது தந்தை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் பிரிபடாத சொத்தில் பேர்பாதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிருஷ்ணமூர்த்தியின் முழுபங்கு தான் பேர்பாதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ–9 க்கு பின்னிட்டு முழு சொத்தும் ராமச்சந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) நான் இவ்வழக்கின் ராமச்சந்திரனின் வாரிசு என்ற அடிப்படையில் வழக்காடி வருகிறேனா என்றால் இச்சொத்திற்கு ராமச்சந்திரனின் சகோதரரான எனது தந்தை வாரிசாவார். எனது தந்தையின் வாரிசு நான் என்ற அடிப்படையில் இவ்வழக்கை வழக்காடி வருகிறேன். ராமச்சந்திரன் நேரடி வாரிகள் யாருமின்றி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து எனக்கு எவ்வித பரிகாரமும்

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியமானது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.06.23 15:44:15 +0300

District Munsif ,
Uthamapalayam.